2022 மார்ச் 22]

இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்டமைப்புகளை உருவாக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதால், அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. எனவே, இந்தக் கட்டமைப்புப் பணிகள் முடிந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின் அடிப்படையில், அதற்கான பணிகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

பனை பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலை

***22052—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் பகுதியில் பனை பொருட்கள் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பகுதியில் பனை பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பனை, அதை நாளும் நினை' என்ற தமிழ் மொழியை, நான் அறிந்ததைவிட மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூடுதலாக அறிந்திருப்பார்கள். பராமரிப்பு இன்றியும் பலன் தருபவை பனை மரங்கள். 'பனை மரம் விதையிட்ட நாளைத்*

தவிர, மற்ற எந்த நாளும் கவனிக்காமல் விட்டுவிட்டாலும் தானாய் வளர்ந்து பயன்தரும்' என்று நாலடியாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரம் தமிழர்களின் வாழ்வோடும், மொழியோடும் இயைந்துள்ளது என்பதற்கு சங்க இலக்கியங்களே சான்றாகும். தமிழ் மொழியின் ஆரம்பகால ஊடகமாக பனை இலைகள் செயல்பட்டன. தமிழ்நாட்டில், 5 கோடி பனை மரங்கள் உள்ளன. சுமார் 3 இலட்சம் குடும்பங்கள் பனை இலைகள் மற்றும் நார் ஆகியவற்றைக் கொண்டு, கூடை பின்னுதல், பாய், கயிறு திரித்தல் போன்ற தொழில்களைச் சார்ந்தும், 11 ஆயிரம் பனைத் தொழிலாளர்கள் நுங்கு அறுவடை, பதநீர் இறக்குதல்மூலம் பனை மரங்களை வாழ்வாதாரமாகக் கொண்டும் வாழ்ந்து வருகின்றார்கள். பனை சாகுபடியை ஊக்குவிக்க, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, அரசின்மூலம் பனை மேம்பாட்டு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட, தன்னுடைய சொந்த செலவில் ஒரு இலட்சம் பனை விதைகளை இத்திட்டத்திற்கு வழங்கி உள்ளார்கள். இந்த வருடம் 10 இலட்சம் பனை விதைகள் வேளாண்மைத் துறையின் மூலமாக விநியோகிக்கப்பட உள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, இத்தனையையும் கருத்திலே கொண்டு, போளூர் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பனை விவசாயிகள் மற்றும் பனைத் தொழிலாளர்களின் நலனைக் கருதி, தொழிற்கூடங்கள் அமைக்க அரசு முன்வருமா எனக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பனைத் தொழிலை மேம்படுத்த, பனைத் தொழிலாளர்களைப் பாதுகாக்க பல அரிய திட்டங்களை நிறைவேற்றி வருகின்றார்கள். குறிப்பாக, ரேஷன் கடைகளில் தரமான பனை வெல்லம் விற்பனை செய்தல், நவீன முறையில் தரமான பனை வெல்லம் தயாரிக்கும் பயிற்சி அளித்தல், பெண்களுக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்க பயிற்சி அளித்தல், 25 இலட்சம் பனை விதைகள் விதைத்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்கள். தமிழ்நாட்டில், மொத்தம் 10 இலட்சத்து 37 ஆயிரம் பனைத் தொழிலாளர்கள் உள்ளார்கள். திருவண்ணாமலை மாவட்டத்தில்,

2022 மார்ச் 22]

சுமார் 28 ஆயிரம் பனை மரங்கள் உள்ளன, 4,250 பனைத் தொழிலாளர்கள் உள்ளார்கள். குறிப்பாக, போளூர் தொகுதியில், சுமார் 4,000 பனை மரங்கள் உள்ளன. 1,350 பனைத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய மாவட்ட சம்மேளனத்தில், ஆரம்ப பனை வெல்ல உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யப்படவில்லை. அவற்றில் அவர்கள் பதிவு செய்ய முன்வந்தால், அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து, மாவட்ட சம்மேளனத்தில் இணைத்து, பனைப் பொருள் தயாரிக்கும் பயிற்சி வழங்க பரிசீலிக்கப்படும்.

மேலும், 2022–2023 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை–உழவர் நலத் துறைக்கான நிதிநிலை அறிக்கையில், பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க, பனை வெல்லம், பனங்கற்கண்டு தயாரிக்கும் கூடம் அமைத்தல், உபகரணங்கள் மற்றும் பனை மரம் ஏறும் இயந்திரங்கள் ஆகியவை 75 சதவிகிதம் மானியத்தில் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. எனவே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில், போளூர் பகுதியில் பனைப் பொருள் தயாரிக்கும் தொழிற்கூடத்தை அரசின் மானியத்தைப் பெற்று அமைத்துக்கொள்ளலாம். அதனடிப்படையில் அந்தப் பகுதியிலுள்ள பனை வெல்ல உற்பத்தியாளர்களை ஒருங்கிணைத்து ஒரு கூட்டுறவுச் சங்கமாகப் பதிவு செய்யவும், தொழிற்கூடம் அமைக்கத் தேவையான மானியம் பெறுவதற்கும் பனை வாரியம்மூலம் உதவி செய்யப்படும். மேலும், அவர்கள் தயாரிக்கும் பனை வெல்லம், பனங்கற்கண்டு போன்றவை பனை வாரியம்மூலம் கொள்முதல் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை வாரியம் மாண்புமிகு அம்மா அவர்களால் அமைக்கப்பட்டது என்பதை நினைவுபடுத்தி, இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வேளாண்மைத் துறை நிதிநிலை அறிக்கையில் பனை வெல்லம் தயாரிக்க பயிற்சியும், அதற்கான உபகரணங்களும் பனை விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளதாகச் சொல்லப்பட்டுள்ளது. ஓலைப் பொருட்கள் தயாரிக்க பெண்களுக்கு உரிய பயிற்சி அளிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்படும்*

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்க, பனைமரம் ஏறும் இயந்திரங்கள், பனை வெல்லம், பனங்கற்கண்டு மற்றும் கருப்பட்டி போன்ற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்க கூடங்கள் அமைத்தல், உபகரணங்கள் வாங்குதல் போன்றவற்றுக்கு 75 சதவிகித மானியத்தில் இப்பொருட்கள் எல்லாம் வழங்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாய்ப்பை திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பனை விவசாயிகளும், குறிப்பாக போளூர் சட்டமன்றத் தொகுதியிலே உள்ளடங்கியிருக்கிற பனை விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், வேளாண்மைத் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு பனைப் பொருட்கள் மேம்பாட்டு வாரியம், Khadi and Village Industries Commission ஆகியவை இணைந்து செயல்பட்டு, போளூர் பகுதியில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடங்களை அமைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்று 10 மாதங்கள்தான் ஆகிறது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். நீங்கள் கேட்டதையெல்லாம் கொடுத்தும், மீண்டும் மீண்டும் நீங்கள் கேட்கிறீர்கள். அது கூடவே, அம்மா அவர்களைச் சேர்த்துகொள்கிறீர்கள். அதைத்தான் செய்கிறீர்களே தவிர, வேறொன்றும் செய்யவில்லை. அவர் தெளிவாகச் சொல்லிவிட்டார், நாங்களும் உடனே செய்கிறோம் என்று சொல்லிவிட்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தத் துறைகளை வைத்திருக்கிறார் என்பதை முதலில் பாருங்கள். முன்னாள் முதலமைச்சர் அவர்கள் எந்தத் துறையை வைத்திருந்தார்? எந்தத் துறையை கையில் வைத்துக்கொண்டிருந்தார்? (குறுக்கீடு) பொதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய செயல்பாட்டை மட்டும் சொல்கிறேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தற்போது மாற்றுத் திறனாளிகள் நலத் துறையை வைத்திருக்கிறார்கள். அவருடைய சிந்தனையைப் பாருங்கள். அதற்காகத்தான் இன்று உலகமே அவரைப் பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) ஆகவே,

2022 மார்ச் 22]

நிச்சயமாக உங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள், உங்களை நான் அனுமதிக்கிறேன்.*

> **[குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. உலக தண்ணீர் தினம் (22–3–2022) – பேரவைத் தலைவர் வாழ்த்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று உலக தண்ணீர் தினம். 'நீரின்று அமையாது உலகு'; தமிழகத்தில் விவசாயிகளுக்கு மிக முக்கியமானது தண்ணீர். அந்தத் தண்ணீரை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெற்றுத் தந்து கொண்டிருக்கிறார்கள். காவேரி என்றால் பிரச்சினைதான்; முல்லைப் பெரியாறு என்றால் பிரச்சினைதான்; எல்லா பிரச்சினைகளையும் தாண்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவேரியிலும், முல்லைப் பெரியாறிலும் நமக்குரிய தண்ணீரை பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு இருக்கிறது. விவசாயிகளின் பாதுகாவலராக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கின்றார் என்ற நம்பிக்கை அவர்களுக்கு பிறந்து இருக்கின்றது. அதோடு, எல்லா வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்குகின்ற திட்டத்தையும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிக்கோளாகக் கொண்டு இந்த ஆண்டு முதல், மிகச் சிறப்பாக அதை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். உலக தண்ணீர் தினத்தன்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றுகின்ற மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன் உள்ளிட்ட அனைத்து அமைச்சர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் அனைவருக்கும் உலக தண்ணீர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*